இந்திய தேர்தல் தொகுதிகள் எல்லைவரம்பிடுதல் ஆணையம்
நிர்வச்சன் சதன்,அசோகா சாலை, புதுதில்லி 110001.

சங்கரராம்,
செயலர்.

தொலைபேசி எண் (011) 23052005
தொலைநகலி எண (011) 23052006

எண் 282/POND/2004-Vol.III

தேதி:- 31.03.2005
10 சைத்ரா, 1926(சக)

# அறிவிக்கை

2002ஆம் ஆண்டு தேர்தல் தொகுதிகள் எல்லைவரம்பிடுதல் சட்டத்தின் (33/ 2002) 10ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவை அடியொற்றி (இதில் இதன்பின்பு ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு எனச்சுட்டப்படும்) புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்தொகுதிகளின் எல்லைவரம்பிடுதல் பொறுத்தமட்டில் மேற்சொன்ன சட்டத்தின் 4ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுடன் படித்துப் பொருள்கொள்ளப்படவேண்டிய 9ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் தேர்தல்தொகுதிகள் எல்லைவரம்பிடுதல் ஆணையத்தால் செய்யப்பட்ட பின்வரும் ஆணையானது ஈங்கிதனால் வெளியிடப்படுகிறது :-

## ஆணை எண் 6

2003ஆம் ஆண்டு தேர்தல்தொகுதிகள் எல்லைவரம்பிடுதல் (திருத்தம்) சட்டத்தினால் (3/2004) திருத்தம் செய்யப்பட்டவாறான 2002ஆம் ஆண்டு தேர்தல் தொகுதிகள் எல்லைவரம்பிடுதல் சட்டத்தின் (33/ 2002) 8, 4 மற்றும் 2(f)ஆம் பரிவுகளை அடியொற்றி, தேர்தல்தொகுதி எல்லைவரம்பிடுதல் ஆணையமானது, இந்திய அரசிதழின் சிறப்பு வெளியீட்டிலும் புதுச்சேரி அரசிதழின் சிறப்பு வெளியீட்டிலும் 8.10.2004 அன்று வெளியிடப்பட்ட 8.10.2004 தேதியிட்ட அதன் ஆணை எண் 1இன் மூலம் பின்வருமாறு தீர்மானித்துள்ளது :-

(i) புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்கு மக்களவையில் ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய பதவியிடங்கள் மொத்த எண்ணிக்கை ஒன்று (1) ஆகும்: இதில் பட்டியல் குலத்தினருக்குப் பதவியிடம் ஏதும் ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது மற்றும் பட்டியல் பழங்குடியினருக்குப் பதவியிடம் ஏதும் ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது மற்றும்

(ii) புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு சட்டப்பேரவைக்குக் குறித்தளிக்கப்படவேண்டிய பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கை முப்பது (30) ஆகும்: இதில் பட்டியல் குலத்தினருக்கு ஐந்து (5) பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்குப் பதவியிடம் ஏதும் ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது என்பதாலும்,

மேற்சொன்ன சட்டத்தின் 9ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவுடன் படித்துப் பொருள்கொள்ளப்படவேண்டிய 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினை அடியொற்றி, தேர்தல்தொகுதி எல்லைவரம்பிடுதல் ஆணையமானது, ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இணை உறுப்பினர்களுடன் இணைந்து, புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்தொகுதிகளை எல்லைவரம்பிடுதல் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதாலும்,

தேர்தல்தொகுதி எல்லைவரம்பிடுதல் ஆணையமானது, மேற்சொன்ன சட்டத்தின் 9ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவினை அடியொற்றி, ஒன்றியத்து ஆட்சிப்பரப்பிலுள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்தொகுதிகளின் எல்லைவரம்பிடுதலுக்கான அதன் செயற்குறிப்புகள் பற்றிய மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகளை முறையே 25.10.2004 மற்றும் 20.12.2004க்குள்ளாக அனுப்பிவைக்கக்கோரும் பொருட்டு, அச்செயற்குறிப்புகளை, ஆணையத்தின் எந்த இணை உறுப்பினர்கள் அவர்களுடைய மாறுபட்ட கருத்துக்குறிப்புகள் வெளியிடப்படவேண்டும் என விரும்பினரோ அவர்களுடைய அத்தகைய மாறுபட்ட கருத்துக்குறிப்புகளுடன், இந்திய அரசிதழ் மற்றும் புதுச்சேரி அரசிதழின் சிறப்பு வெளியீடுகளில் 8.10.2004 மற்றும் 8.12.2004 அன்று வெளியிட்டுள்ளது என்பதாலும்,

இச்சட்டத்தின் மேற்சொன்ன 9ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவினை அடியொற்றி, ஆணையத்தின் மேற்குறிப்பிட்ட ஆணை எண் 1 மற்றும் ஆணையத்தின் மேற்சுட்டப்பட்ட வரைவு செயற்குறிப்புகளானவை இணை உறுப்பினர்களின் மாறுபட்ட கருத்துக்குறிப்புகளோடு 9.10.2004 மற்றும் 8.12.2004 தேதிகளன்று உள்ளூர் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன: மேலும், வானொலி, தொலைக்காட்சி மற்றும் பிற தகவல் தொடர்பு சாதனங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது என்பதாலும்,

இச்சட்டத்தின் மேற்சொன்ன 9ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவினை அடியொற்றி, ஆணையமானது 8.10.2004 அன்று பொது அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டது: 25.10.2004 மற்றும் 20.12.2004 அன்று அல்லது அதற்கு முன்பு ஆணையத்தால் பெறப்படும் மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகள் அனைத்தையும் கருதுகைசெய்வதற்கான பொது அமர்வின் இடம், தேதி மற்றும் நேரம் பற்றி இப் பொது அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டிருந்தது: மேலும், இப்பொது அறிவிப்பானது 1.11.2004, 8.12.2004, 4.1.2005 மற்றும் 25.1.2005 அன்று அதன் மறு அறிவிப்புகளின் வாயிலாக பின்னர் திருத்தம்செய்யப்பட்டது என்பதாலும,

இச்சட்டத்தின் மேற்சொன்ன 9ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவினை அடியொற்றி, ஆணையமானது 19.3.2005 அன்று காரைக்காலிலும் 20.3.2005 அன்று புதுச்சேரியிலும் பொது அமர்வுகளை நடத்தி, பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தது: மேலும், ஆணையத்திற்கு ஏற்கனவே அவர்களால் எழுத்துமூலமான கோரிக்கைகள் ஏதேனும் சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும் அதற்கும் கூடுதலாக வாய்மொழி மூலமான மற்றும் எழுத்து மூலமான முறையீடுகளைச் செய்வதற்கான முழு வாய்ப்பும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது என்பதாலும்,

ஆணையமானது, அரசமைப்பு மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் தொடர்புடைய வகைமுறைகளின் அடிப்படையில், மேற்சொன்ன செயற்குறிப்புகள் தொடர்பாக மேற்சொன்ன பொது அமர்வுகளில் செய்யப்பட்ட மற்றும்/அல்லது அதனால் பிறவாறாகப் பெறப்பட்ட மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகள் அனைத்தையும் கருதுகைசெய்துள்ளது என்பதாலும்,

எனவே, இப்பொழுது, திருத்தம் செய்யப்பட்டவாறான மேற்சொன்ன சட்டத்தின் 2(f) மற்றும் 4ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுடன் படித்துப் பொருள்கொள்ளவேண்டிய 9ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (d) பிரிவுக்கூறினை அடியொற்றி, தேர்தல்தொகுதிகள் எல்லைவரம்பிடுதல் ஆணையமானது ஈங்கிதனால் பின்வருமாறு தீர்மானிக்கிறது :-

1. மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நோக்கத்திற்காகப் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பானது எத்தனை ஆட்சிப்பரப்புத் தொகுதிகளாகப் (territorial constituencies) பிரிக்கப்படவேண்டுமோ அத்தனை ஆட்சிப்பரப்புத் தொகுதிகள் குறித்தும், அத்தகைய தொகுதி ஒவ்வொன்றின் பரப்பிடம் குறித்தும் **அட்டவணை-A**யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மக்களவைத் தேர்தல்கள் நோக்கத்திற்காகப் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் நாடாளுமன்ற ஆட்சிப்பரப்புத் தொகுதியின் (territorial parliamentary constituency) பரப்பிடம் **அட்டவணை-B**யில் குறிப்பிட்டுள்ளது.

3. **அட்டவணை-A**யில் குறிப்பிடப்பட்டிருக்கிற ஒரு தொகுதியின் பெயரானது **(அ.வ)** என்னும் அடைப்புக்குறிகள் மற்றும் எழுத்துக்களால் வேறுபடுத்தப்பட்டிருக்கிறவிடத்து, அந்தத் தொகுதியிலுள்ள பதவியிடமானது பட்டியல் குலத்தினருக்கான இடஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதாகும்.

## அட்டவணை - அ

## சட்டமன்ற தொகுதிகளும் அவற்றின் பரப்பும்

| வரிசை எண் | சட்டமன்ற தொகுதியின் பெயர் | பரப்பு |
|---|---|---|
| | | **1. புதுச்சேரி வட்டாரம்** |
| 1 | மண்ணாடிப்பட்டு | **மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** மணலிபட்டு, செட்டிபட்டு, சுத்துக்கேனி, புதுகுப்பம், காட்டேரி, குப்பம், தேத்தாம்பாக்கம், கொடாத்தூர், கூனிச்சம்பட்டு, மண்ணாடிப்பட்டு மற்றும் வாதானூர் கிராமங்கள். |
| 2 | திருபுவனை (அ. வ) | **மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** சோரப்பட்டு, வம்புபட்டு, செல்லிப்பட்டு, சன்னியாசிக்குப்பம், கலிதீர்த்தாள்குப்பம், மதகடிப்பட்டு, திருபுவனை மற்றும் திருவாண்டார்கோயில் கிராமங்கள். |
| 3 | உசுடு (அ. வ) | **வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** சேதராப்பட்டு, கரசூர், துத்திப்பட்டு, தொண்டமாநத்தம், ராமநாதபுரம், பிள்ளையார்குப்பம், கூடப்பாக்கம், உளவாய்க்கால், உசுடு கிராமங்கள் மற்றும் **குரும்பாபேட் கிராம பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** வார்டு எண் 1, 2, 3 மற்றும் 4. |
| 4 | மங்கலம் | **வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** அரியூர், கீழூர், சாத்தமங்கலம், மங்கலம், உருவையார், திருக்காஞ்சி, பெருங்களூர், மணக்குப்பம் கிராமங்கள் மற்றும் **குரும்பாபேட் கிராம பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** ஆரியபாளையம் புற வளர்ச்சி, கோட்டமேடு புற வளர்ச்சி மற்றும் கணுவாப்பேட் புற வளர்ச்சி. |

| | | |
|---|---|---|
| 5 | வில்லியனூர் | குரும்பாபேட் கிராம பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள குருவப்பநாயக்கன்பாளையம் புற வளர்ச்சி, அரசூர் புற வளர்ச்சி, சுல்தான்பேட் புற வளர்ச்சி, வில்லியனூர் புற வளர்ச்சி, வள்ளுவன்பேட் புற வளர்ச்சி, கரையான்பேட் புற வளர்ச்சி, பெரியப்பேட் புற வளர்ச்சி, உத்திரவாகினிபேட் புற வளர்ச்சி, ஆத்துவாய்க்கால்பேட் புற வளர்ச்சி, தட்டான்சாவடி புற வளர்ச்சி, மணவெளி புற வளர்ச்சி, அரும்பார்த்தபுரம் புற வளர்ச்சி, ஒதியம்பேட் புற வளர்ச்சி மற்றும் புதுவை நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண் 42. |
| 6 | உழவர்கரை | உழவர்கரை நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 31, 32, 33 மற்றும் 37 |
| 7 | கதிர்காமம் | உழவர்கரை நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 25, 26, 27, 35 மற்றும் 36 |
| 8 | இந்திரா நகர் | உழவர்கரை நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 21, 22, 23, 24, 28, 29 மற்றும் 30. |
| 9 | தட்டாஞ்சாவடி | உழவர்கரை நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 8, 18, 19, 20 மற்றும் 34. |
| 10 | காமராஜ் நகர் | உழவர்கரை நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 13, 14, 15, 16 மற்றும் 17. |
| 11 | லாஸ்பேட் | உழவர்கரை நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 7, 9, 10 மற்றும் 11 |
| 12 | காலாப்பட்டு | உழவர்கரை நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 1, 2, 3, 4, 5, 6 மற்றும் 12. |
| 13 | முத்தியால்பேட்டை | புதுச்சேரி நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 1, 2, 3, 4, 6, 7 மற்றும் 8. |
| 14 | ராஜ்பவன் | புதுச்சேரி நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 5, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 16. |
| 15 | உப்பளம் | புதுச்சேரி நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 18, 19, 20, 21, 22 மற்றும் 23. |
| 16 | உருளையன்பேட்டை | புதுச்சேரி நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 15, 17, 24, 25, 26, 28 மற்றும் 32. |
| 17 | நெல்லித்தோப்பு | புதுச்சேரி நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 27, 29, 30, 31, 33 மற்றும் 34. |
| 18 | முதலியார்பேட்டை | புதுச்சேரி நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்கள் 35, 36, 37, 38 மற்றும் 40. |

| | | |
|---|---|---|
| 19 | அரியாங்குப்பம் | **புதுச்சேரி நகராட்சி பகுதியிலுள்ள** வார்டு எண்கள் 39, 41 மற்றும் **புதுச்சேரி (நகராட்சி+புற வளர்ச்சி) பகுதியிலுள்ள** அரியாங்குப்பம் புற வளர்ச்சி, காக்காயன்தோப்பு புற வளர்ச்சி, மற்றும் பெரியவீராம்பட்டினம் புற வளர்ச்சி. |
| 20 | மணவெளி | **அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்திலுள்ள** மணவெளி, அபிஷேகபாக்கம், தவளகுப்பம், பூர்ணாங்குப்பம் மற்றும் திம்மநாயக்கன்பாளையம் கிராமங்கள். |
| 21 | ஏம்பலம் (அ. வ) | **நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** ஏம்பலம், கோர்காடு, கரிக்கலாம்பாக்கம் கிராமங்கள் மற்றும் **பாகூர் கொம்யூன் பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** அரங்கனூர், கிருமாம்பாக்கம், பிள்ளையார்குப்பம், சேலியமேடு கிராமங்கள். |
| 22 | நெட்டப்பாக்கம் (அ. வ) | **நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** மடுகரை, கரியமாணிக்கம், ஏரிப்பாக்கம், பண்டசோழனூர், நெட்டப்பாக்கம் கிராமங்கள் மற்றும் **பாகூர் கொம்யூன் பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** பனையடிக்குப்பம், கரையாம்புத்தூர், மணமேடு கிராமங்கள். |
| 23 | பாகூர் | **பாகூர் கொம்யூன் பஞ்சாயத்தின் பகுதியிலுள்ள** இருளன்சந்தை, பாகூர், உச்சிமேடு, பரிக்கல்பட்டு, குருவிநத்தம், கடுவனூர் மற்றும் மணப்பட்டு கிராமங்கள். |
| | **2. காரைக்கால் வட்டாரம்** | |
| 24 | நெடுங்காடு (அ. வ) | **நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்திலுள்ள** குரும்பகரம், பொன்பேத்தி, பூத்தகுடி, நெடுங்காடு, மேலகாசாக்குடி கிராமங்கள் மற்றும் **கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்திலுள்ள** வரிச்சிக்குடி (வடக்கு), பூவம், திருவேட்டகுடி, வரிச்சிக்குடி (தெற்கு), கோட்டுச்சேரி கிராமங்கள். |
| 25 | திருநள்ளார் | **திருநள்ளார் கொம்யூன் பஞ்சாயத்திலுள்ள** அம்பகரத்தூர், நல்லழுந்தூர், தேவமாபுரம், சொரக்குடி, சுப்பராயபுரம், கீழாவூர் திருநள்ளார், தென்னங்குடி, சேத்தூர், செல்லூர் மற்றும் பேட்டை கிராமங்கள். |
| 26 | காரைக்கால் வடக்கு | **காரைக்கால் நகராட்சி பகுதியிலுள்ள** வார்டு எண்கள் 1, 2, 3, 4, 5, 8 மற்றும் 9. |
| 27 | காரைக்கால் தெற்கு | **காரைக்கால் நகராட்சி பகுதியிலுள்ள** வார்டு எண்கள் 6, 7, 10, 11, 12, 13, 14, 15, 16 மற்றும் 17. |
| 28 | நிரவி - திருமலைராயன்பட்டினம் | **நிரவி கொம்யூன் பஞ்சாயத்திலுள்ள** விழிதியூர், கீழாமனை, நிரவி கிராமங்கள்: **திருமலைராயன்பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்திலுள்ள** திருமலைராயன்பட்டினம், கீழையூர் (வடக்கு), கீழையூர் (தெற்கு), போலகம், வாஞ்சியூர் கிராமங்கள் மற்றும் **காரைக்கால் நகராட்சி பகுதியிலுள்ள** வார்டு எண் 18. |

| | | |
|---|---|---|
| **3. மாஹி வட்டாரம்** | | |
| 29 | மாஹி | மாஹி நகராட்சி |
| **4. ஏனாம் வட்டாரம்** | | |
| 30 | ஏனாம் | ஏனாம் நகராட்சி |

## அட்டவனை - ஆ
## நாடாளுமன்ற தொகுதியும் அதன் பரப்பும்

| வரிசை எண் | நாடாளுமன்ற தொகுதியின் பெயர் | பரப்பு |
|---|---|---|
| 1 | புதுச்சேரி | புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் அனைத்து பகுதிகளும். |

**குறிப்பு:** கொம்யூன் பஞ்சாயத்து (கொ.ப), கிராம பஞ்சாயத்து (கி.ப), கிராமம் (கி), நகராட்சி (ந), புறநகர் வளர்ச்சி (பு.வ), வார்டு அல்லது பிற ஆட்சிப்பரப்புப் பிரிவு குறித்து **அட்டவணை-A**யில் உள்ள சுட்டுகை எதுவும், 30.3.2005 அன்றுள்ளவாறான அந்த கொம்யூன் பஞ்சாயத்து (கொ.ப), கிராம பஞ்சாயத்து (கி.ப), கிராமம் (கி), நகராட்சி (ந), புறநகர் வளர்ச்சி (பு.வ), வார்டு அல்லது பிற ஆட்சிப்பரப்புப் பிரிவுக்குள் உள்ளடங்கிய பரப்பிடத்தைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

*ஒப்பம்*
குல்தீப் சிங், தலைவர்

*ஒப்பம்*
B.B. தாண்டன், உறுப்பினர்

*ஒப்பம்*
R. நாராயணா, உறுப்பினர்

**ஆணைப்படி,**
(சங்கர ராம்)
செயலர்
இந்திய தேர்தல் தொகுதிகள் எல்லைவரம்பிடுதல் ஆணையம்